APRIL/MAY 2025

FTA21/CTA21 — இக்கால இலக்கியம் — 2
(கவிதை, உரைநடை, நாடகம், புதினம், சிறுகதை)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

1. இன்னொரு தேசிய கீதம் — பெயர்க் காரணம் தருக.

2. யாரெல்லாம் கூனிகளாக மாறினர் என்று வைரமுத்து உருவகப்படுத்துகிறார்?

3. காற்றில் கலந்த பேரோசை — யார்?

4. "வான வேடிக்கைக்காரன் நாழிக்குள் திணிக்கும் மருந்து போல்" எனும் உவமை எதனைச் சிறப்பிக்கின்றது?

5. நினைக்கப்படும் முதன்மை கதாபாத்திரங்களைக் குறிப்பிடுக.

6. முழுமையான நாடகம் எத்தனை அங்கம் கொண்டது?

7. கோவிந்தன் செய்த தொழில் என்ன?

T.V. Malai Government Arts & Science College

8. துவக்கம் முதல் இறுதி வரை மகாநதி படைப்பு எதன் வழி நகர்கிறது?

9. சிறுகதையின் தந்தை என்று யாரைக் கூறுவர்?

10. 'சினிமாவுக்குப் போன சித்தாள்' — சிறுகதையின் ஆசிரியர் யார்?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) குழந்தைகளின் கல்வி நிலைமை வைரமுத்து எங்ஙனம் சாடுகிறார்?

(அல்லது)

(ஆ) கல்வி முறை எப்படி இருக்க வேண்டும் என்று இன்னொரு தேசிய கீதம் மொழிகிறது?

12. (அ) ஜீவாவின் கொள்கையும் நம்பிக்கையும் என்ன?

(அல்லது)

(ஆ) ஜீவாவின் பேச்சு நடை குறித்துச் சுந்தர ராமசாமி கூறுவன யாவை?

13. (அ) சமூகத்தின் வீழ்ச்சியை ஜெயந்தன் எங்ஙனம் கூறுகிறார்? விளக்குக.

(அல்லது)

(ஆ) நினைக்கப்படும் நாடகத்தின் உத்திகளைக் கூறி, விவரிக்க.

14. (அ) கோவிந்தனின் கொள்கையை மகாநதி கொண்டு விவரி.

(அல்லது)

(ஆ) புதுச்சேரி, பிரெஞ்சு அதிகாரம் பற்றிப் பிரபஞ்சன் கூறுவன யாவை?

15. (அ) "குளந்தங்கரை அரச மரம்" கருத்தினை விளக்குக.

(அல்லது)

(ஆ) செவ்வாழையில் அறிஞர் அண்ணா சொல்லும் சமுதாய கருத்துகள் யாவை?

Shanmuga Industries Arts & Science College T.V.Malai

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்க.

16. இன்னொரு தேசியகீதம் குறிப்பிடும் கருத்துகளை விரித்து எழுதுக.

17. காற்றில் கலந்த பேரோசை தரும் செய்திகளை விவரிக்க.

18. நினைக்கப்படும் கதைப் பொருண்மையை ஆய்க.

19. மகாநதி கூறும் சமுதாயச் செய்திகளைத் தொகுக்க.

20. சிறுகதைகள் கூறும் கருத்துகளை நும் பாடப்பகுதி கொண்டு ஆய்ந்துரைக்க.

———————